# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 117/2017/மா

ஆணை எண்: 203/2017

நாள்: 21/08/2017

**திரு. எம். இராஜசேகரன்,**
**போத்தனூர்,**
**நாமக்கல் மாவட்டம்.** – முறையீட்டு மனுதாரர்

**ஆணையர்,**
**ஈரோடு மாநகராட்சி,**
**ஈரோடு.** – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம் போத்தனூர், கீழத்தெரு, கதவு எண்.27/8ல் வசிக்கும் திரு. எம். இராஜசேகரன், என்பவரின் 20.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 22.5.2017 அன்று பெறப்பட்டு 117/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இம்முறைமன்ற அசல் மனு எண்.117/2017 நாள்:19.6.17ல் முறையீட்டு மனுதாரருக்கு 26.07.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகக் கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தும் அவர் குறிப்பிட்ட நாளன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஈரோடு மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், போத்தனூர், கீழத்தெரு, கதவு எண். 27/8ல் வசித்துவரும் திரு. எம். இராஜசேகரன் என்பவர், ஈரோடு மாநகரம், சம்பத் நகர் மெயின் ரோடு, கதவிலக்கம் 104ல் பல ஆண்டுகளாக இயங்கிவரும் கல்யாணி கிட்னி கேர் சென்டர் என்ற மருந்துவமனைக் கட்டிடம் உள்ளூர் திட்டக்குழு அனுமதி இல்லாமல் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் இயங்கி வருவதால் அதனை சீல் வைக்க கோரியும், அனுமதியில்லாமல் இயங்குவதற்கு அனுமதித்த ஈரோடு மாநகராட்சி ஆணையர் மீது துறைசார் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிடக் கோரியும் 20.5.2017 நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமத்தின் பொது தகவல் அலுவலரிடமிருந்து அவரது கடிதம் எண். 441/2016 ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம் 2 நாள்: 20.05.2016ன்வாயிலாக மேற்சொன்ன ஈரோடு கல்யாணி கிட்னி சென்டருக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை என்ற பதிலைப் பெற்று, அதனை அடிப்படையாகக் கொண்டு முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் குறித்து ஈரோடு மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. ஈரோடு மாநகராட்சி ஆணையர் தமது பதில் உறுதி ஆவணத்தில் முறையீட்டாளரின் கூற்று பொய்யானது என்றும், க.வ.தி.அ.எண்.2/2010 ந.க. எண்.1103/2009 நாள்:05.03.2010, **வீரப்பன்சத்திரம்** நகராட்சி க.ம.எண்.31/2010 நாள்:19.03.2010ல் முறையாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், ஈரோடு உள்ளூர் திட்ட குழும அலுவலர், கல்யாணி கிட்னி கேர் சென்டருக்கு கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை என தவறுதலாக முறையீட்டாளருக்கு தெரிவித்ததை கருத்தில் கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

3) ஈரோடு மாநகராட்சி ஆணையர் சார்பாக, மாநகராட்சியின் உதவி ஆணையர் 19.7.2017 அன்று இம்முறைமன்ற நடுவர் முன்பாக நேரில் ஆவணங்களுடன் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார். விசாரணையின் போது, மாநகராட்சி ஆணையரின் பதில் உறுதி ஆவணத்தை உறுதி செய்யும் வகையில், முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திருமதி. கல்யாணி என்பவருக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்ட வீரப்பன்சத்திரம் நகராட்சி க.வ.தி.அ.எண். 2/2010 என்ற எண்ணிட்ட ந.க.எண். 1103/2009 நாள்: 05.03.2010 திட்ட அனுமதி மற்றும் செயல்முறை ஆணை நகலையும் ஆஜர் செய்து வாக்குமூலம் அளித்துள்ளார். மேற்சொன்ன கல்யாணி கிட்னி கேர் சென்டர் மருந்துவமனைக்கு கட்டிட அனுமதி வேண்டி உள்ளூர் திட்ட குழுமத்திற்கு மனுச் செய்திருந்தாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளூர் திட்டகுழும தலைவர் என்ற முறையில் 17.2.2010 அன்று அனுமதி கோரிய மனுமீது விவாதித்து, முடிவில் மனு பரிசீலிக்கப்பட்டு ஆணை எண். 2/2010ன்படி கடித எண். ந.க.எண். 1103/2009 நாள் :5.3.2010ல் அனுமதி வழங்கப்பட்டு உரிய ஆணை வீரப்பன்சத்திரம் நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு எண். 31/2010 நாள்:19.3.2010ல் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் 25.10.2011ல் அருகிலுள்ள நகராட்சிகளுடன் வீரப்பன் சத்திரம் நகராட்சியும் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது என்றும் எனவே அனுமதி பெற்ற கல்யாணி கிட்னி கேர் சென்டர் கட்டிடத்தை இடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் மனுதாரர் உள்நோக்கத்தோடு அனுப்பியுள்ள புகார் மனுவை தள்ளுபடி செய்ய கோரி, சம்மந்தப்பட்ட மருந்துவமனைக்கு அங்கீகாரம் வழங்கிய ஆவண நகல்களையும் ஈரோடு உதவி ஆணையர் இம்முறைமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

4) 19.07.2017 நாளிட்ட அழைப்பாணை எண்.117/2017ன் வாயிலாக விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தும் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகத் தவறிய நிலையில், எதிர்மனுதாரரின் பதில் உறுதி ஆவணம், ஈரோடு மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் ஏனைய ஆவணங்கள் இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் முறையீட்டாளரின் கோரிக்கை உள்ளூர் திட்ட அனுமதி இல்லாமல் இயங்கி வருவதாக அவர் குறிப்பிட்ட ஈரோடு கல்யாணி கிட்னி கேர் சென்டர் கட்டிடத்தை சீல் வைக்கவும், அவ்வாறு இயங்க அனுமதித்த ஈரோடு மாநகராட்சி ஆணையர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள கோரியது மட்டுமே. மேலே பத்தி 3ல் விரிவாக சுட்டிக் காட்டியுள்ளவாறு

ஈரோடு கல்யாணி கிட்னி கேர் சென்டர் கட்டிடத்திற்கு உள்ளூர் திட்ட அனுமதியும், கட்டிட அனுமதியும் முறையாகப் பெறப்பட்டு, அவ்வாணைகளின் நகல்கள் இம்முறைமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், உள்ளூர்திட்ட அனுமதியில்லாமல் சட்டவிரோதமாக பல ஆண்டுகளாக ஈரோடு மாநகராட்சியில் கல்யாணி கிட்னி கேர் சென்டர் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்ட முறையீட்டுதாரரின் புகார் மெய்த்தன்மையற்றது என்று முடிவு செய்து முறையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்யலாம் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 - ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. எம். இராஜசேகரன்,
   27/8, கிழக்குத் தெரு,
   போத்தனூர் அஞ்சல் – 638 181,
   நாமக்கல் மாவட்டம்.

2. ஆணையர், ஈரோடு மாநகராட்சி,
   ஈரோடு.

நகல்:

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர் (நிர்வாகம்),
பேரூராட்சியில் பிரிவு –3,
இ.கோ/ உதிரி.